
# அறிஞர் அண்ணா



என். ரமேஷ்

Scanned by CamScanner

# அறிஞர் அண்ணா

## பிறப்பும் - இளமைப் பருவமும்

காஞ்சிபுரத்தில் வசித்து வந்த நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த நடராஜன் - பங்காரு அம்மாள் தம்பதிக்கு 1909ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாளன்று மகனாகப் பிறந்தவர் அண்ணாதுரை ஆவார்.

அண்ணாவுக்கு ஆறு வயதானபோது, காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் ஆரம்பப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். அந்தக் காலத்தில் ஆண்பிள்ளைகளுக்கும் குடுமி வைத்து, காது குத்தி, கடுக்கன் போடுவார்கள். அண்ணா குடுமியுடன்தான் பள்ளிக்குச் சென்றார்.

அண்ணாவுடன் படித்த மற்ற மாணவர்கள் தலை முடியைக் கிராப்பு வெட்டி வருவார்கள். அவர்களைப் பார்க்கும்போதெல்லாம், தான் மட்டும் குடுமி வைத்திருப்பது அண்ணாவுக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சின்ன வயதிலேயே தன் விருப்பத்தை வீட்டினரிடம் எடுத்துச் சொல்லி வாதாடி, குடுமியை எடுத்து கிராப்புக்கு மாறினார் அண்ணா.

வேண்டாத பழைய மரபுகளை மாற்றத் துணிந்த அண்ணாவின் சீர்திருத்தக் கொள்கைகள் அவருடைய இளம் பருவத்திலேயே உருவாகிவிட்டதை நாம் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

Scanned by CamScanner

அண்ணாவின் அன்னை பங்காரு அம்மாளாக இருந்த போதிலும், அண்ணாவின் குழந்தைப் பருவத்திலிருந்தே அவரை அன்போடு சீராட்டி வளர்த்தவர் அவரது சிற்றன்னை ராசாமணி அம்மையார் ஆவார். அண்ணா அவரை 'தொத்தா' என்றே அழைப்பார்.

காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் ஆரம்பப் பள்ளியில் ஆரம்பக் கல்வியையும், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலைக் கல்வியையும் படித்து முடித்தார் அண்ணா. 1928ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரிப் படிப்பின்போதே 1930ஆம் ஆண்டு ராணி என்னும் பெண்மணியுடன் அண்ணாவின் திருமணம் நடந்தது.

இன்டர்மீடியட் என்னும் இடைநிலை வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்றார். அதிக மதிப்பெண் பெற்றும், மேல் படிப்பு படிக்க அண்ணாவுக்கு வசதி இல்லை. கல்லூரி முதல்வர் சின்னத்தம்பி, அண்ணாவின் நிலையை உணர்ந்து அண்ணாவின் மேற்படிப்புக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தார். அண்ணா பி.ஏ. ஹானர்ஸ் படிக்க வழிவகுத்துக் கொடுத்தார்.

அந்த நாட்களில் அவருடைய சமூகச் சிந்தனைகள் தீவிரமாகியிருந்தன. தமிழக மற்றும் இந்திய வரலாறு மீது அண்ணாவுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. எனவே அவர் நூலகங்களுக்குச் சென்று பல புத்தகங்களைப் படிக்கலானார். பாடப் புத்தகங்கள் மட்டுமின்றி, பல சமூக நோக்கிலான புத்தகங்களையும் படித்தார் அண்ணா. கன்னிமரா நூலகமே கதியென்று கிடந்தார். கட்டுரைகள் எழுதினார். வாய்ப்பு வரும்போதெல்லாம் தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றினார்.

அண்ணா பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது பேராசிரியர் ஒருவர், மாணவர்களிடம் கட்டுரை ஒன்று எழுதி வரும்படிக் கூறினார். மாணவர்கள்

Scanned by CamScanner

## திராவிட முன்னேற்றக் கழகம்

அண்ணா நீதிக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்டன. அண்ணா பெரியாரையே தன் பொதுவாழ்க்கையின் ஆசானாகக் கருதி வந்தார். தனது இறுதிநாட்கள் வரை அவ்வாறே இருக்கவும் செய்தார்.

இருப்பினும், அண்ணாவுக்கு பெரியாரோ சில கருத்து வேறுபாடுகள் தோன்றவே செய்தன. அக்கருத்து வேறுபாடு பின்னாளில் நீதிக்கட்சியிலிருந்து விலகி, தனிக்கட்சி தொடங்குமளவும் கொண்டு சென்றுவிட்டது.

1946ஆம் ஆண்டு வாக்கில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளடக்கிய திராவிடநாடு கோரிக்கையை திராவிடர் கழகத்தினர் முன்வைத்தனர். திராவிடர் கழகத்தின் இக்கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்கவில்லை. பிரிட்டிஷ் அரசு மட்டுமின்றி காங்கிரசைச் சேர்ந்த பல இந்தியத் தலைவர்கள்கூட நீதிக்கட்சியின் இக்கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்தே வந்தனர். அண்ணா பெரியாரோடு வட இந்தியா முழுதும் பயணம் செய்து, திராவிடநாடு கோரிக்கைக்கு ஆதரவு வேண்டி பல தலைவர்களைச் சந்தித்தார்.

இதற்கிடையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. மீண்டும் தொடங்கப்பட்டிருந்த விடுதலை இதழில் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் தேதி பெரியார் ஓர் அதிர்ச்சிகரமான அறிக்கை விடுத்தார். அதாவது, 'திராவிடநாடு கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அதனால் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15ஆம் தேதியை துக்க தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என்பதுதான் பெரியாரின் அறிக்கை.

பெரியாரின் இந்த முடிவில் அண்ணாவுக்கு உடன்பாடு இல்லை. அதனால், பெரியார் அறிக்கைக்கு அண்ணா எதிர் அறிக்கை விட்டார். 'ஆகஸ்ட் 15ஆம் தேதி பிரிட்டிஷ் ஆட்சி

Scanned by CamScanner

ஒழியும் நாள். உலகமே பேசக் கூடிய நாள். வரலாற்றில் இடம் பெறும் நாள். ஆகவே, அந்தத் திருநாளைக் கொண்டாட வேண்டும்' என்று அண்ணா அறிக்கையில் கூறினார்.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த அண்ணாவின் எதிர்ப்பாளர்கள், அண்ணாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி பெரியாரைத் திசை திருப்பினார்கள். கழகத்தில் அண்ணாவுக்கு எதிராகப் பல குரல்கள் கேட்டன. இதனால் அண்ணாவின் கழகப் பணிகள் சற்று ஓயத் தொடங்கின.

இந்த நிலையில் 1948ஆம் ஆண்டு அக்டோபர் 23 அன்று ஈரோட்டில் சிறப்பு மாநாட்டில் பேசிய பெரியார்,

"நான் பொதுத் தொண்டில் ஈடுபட்டு நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எனக்கோ வயது எழுபதுக்கும் மேல். எத்தனை நாட்களுக்குத்தான் என்னால் உழைக்க முடியும்? எனக்குப் பின் அண்ணாதுரையால்தான் கழகத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்ல முடியும். எனவே, பெட்டிச் சாவியை அண்ணாவிடம் கொடுத்து விடுகிறேன். இதன் மூலம் தந்தையாகிய நான் என் கடமையைச் செய்து விட்டேன். இனி, தனயனாகிய அண்ணா தன் கடமையைச் செய்ய வேண்டும்" என்றார்.

பெரியார் - அண்ணா கருத்து வேறுபாடு நீங்கிவிட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் திடீரென்று நடந்த ஒரு நிகழ்ச்சி, பெரியார் மற்றும் அண்ணாவுக்கு இடையில் விரிசலை அதிகப்படுத்தியது.

1949ஆம் ஆண்டு பெரியார், மணியம்மை என்ற இளம்பெண்ணை இரண்டாவது திருமணம் செய்தார். 'திராவிடர் கழகத்தின் இளம் தலைவர்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை; அதனால்தான், கழகத்தையும், கழகத்தின் சொத்துக்களையும்

Scanned by CamScanner

பாதுகாக்க இந்த வயதில் இன்னொரு திருமணம் செய்கிறேன்' என்று கூறினார் பெரியார்.

முன்னதாக அண்ணாவால் மட்டும்தான் கழகத்தைச் சிறப்பாக வழிநடத்த முடியும் என்று கூறியிருந்த பெரியார், இப்போது இப்படிக் கூறுவது கழகத் தொண்டர்கள் மத்தியிலும், அண்ணா ஆதரவாளர்கள் மத்தியிலும அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.

அண்ணாவுக்கு பெரியாரின் வாரிசு அரசியல் பிடிக்கவில்லை. அதனால், பெரியாரின் நிலைப்பாட்டையும் தன்னுடைய நிலைப்பாட்டையும் விளக்கி திராவிடநாடு பத்திரிகையில் அண்ணா எழுதினார். அண்ணாவின் நிலைக்கு உடன்பட்ட தம்பிகள் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்று கூறிய அண்ணா தீர்க்கமாக முடிவெடுத்தார். தன் தம்பிகளோடு திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறினார். திராவிட கழகத்துக்கு மாற்றாக இன்னொரு இயக்கத்தை 1949 செப்டம்பர் 17ஆம் தேதி அன்று தொடங்கினார். அதுதான், திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிடர் கழகத்தில் பெரியார் மட்டும்தான் எல்லாப் பொறுப்புகளையும் வகித்தார். ஆனால், தி.மு.க.வில் எல்லோருக்கும் பொறுப்புகள் பகிர்ந்து அளிக்கப்பட்டது. கழகத்துக்குக் கொடியும் தேர்வு செய்யப்பட்டது.

கறுப்பு - சிவப்பு நிறத்தில் தமிழகத்தின் மூலை முடுக்கெங்கும் கழகக்கொடி பறக்கத் தொடங்கியது. தமிழகமெங்கும் தி.மு.க.வுக்கு கிளைகள் தொடங்கப்பட்டன. கூட்டங்கள், மாநாடுகள் நடந்தன. தமிழகமே தி.மு.க.வின் பக்கம் திரும்பியது.

Scanned by CamScanner

## தேர்தலில் தி.மு.க.

பெரியார் நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றியபின் தேர்தலில் பங்கேற்காமல், வெறும் சமூக சீர்திருத்த இயக்கமாகவே நடத்தி வந்தார். ஆனால் தி.மு.க. தேர்தலில் நிற்கலாமா? வேண்டாமா? என்ற கேள்வி எழுந்தது. இந்தக் கேள்விக்கு தி.மு.க. மாநில மாநாட்டில் பதில் கிடைத்தது.

1956ஆம் ஆண்டு தி.மு.க.வின் மாநில மாநாடு திருச்சியில் கூடியது. மாநாட்டுக்கு வந்தவர்கள்ள இரண்டு பெட்டிகள் வரவேற்றன.

ஒன்று சிவப்பு. மற்றொன்று கறுப்பு. தி.மு.க. தேர்தலில் போட்டியிடலாம் என்று விருப்பம் கொண்டவர்கள் தங்களுயை வாக்குகளை சிவப்புப் பெட்டியில் போட வேண்டும். போட்டியிடத் தேவையில்லை என்று கருதுபவர்கள் தங்கள் வாக்குகளை கறுப்புப் பெட்டியில் போட வேண்டும். சிவப்புப் பொட்டியில் வாக்குகள் அதிகரித்தன. தி.மு.க. தேர்தலில் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து 1957-ல் காங்கிரஸை எதிர்த்து தி.மு.க. களம் இறங்கியது. அண்ணா காஞ்சிபுரத்தில் போட்டியிட்டார். தமிழகம் முழுவதும் தி.முக. சார்பில் 112 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தலில் தி.மு.க.வுக்கு உதயசூரியன் சின்னம் ஒதுக்கப்பட்டது.

முதல் தேர்தல் முடிவிலேயே 15 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற்றது. காஞ்சிபுரத்தில் அண்ணா வெற்றி பெற்றார். காங்கிரசுக்கு முழுமையான வெற்றி கிட்டவில்லை எனினும், அதிகத் தொகுதிகளை வென்ற காரணத்தினால் தமிழகத்தில் காங்கிரஸே ஆட்சி அமைத்தது. கட்சி தொடங்கப்பட்ட எட்டு ஆண்டுகளிலேயே தி.மு.க. தமிழகத்தின் முக்கிய எதிர்க்கட்சியாக உருவெடுத்தது.

Scanned by CamScanner

சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்து அண்ணா பேசினார். அவருடைய பேச்சில் எதிர்க்கட்சிக்காரர்களும் மயங்கினர் என்றால் அது உண்மை.

தி.மு.க. தமிழகமெங்கும் வெற்றிக்கொடி கட்டிக் கொண்டிருந்த நிலையில், 1959ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் வந்தது. தி.மு.க. பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று, சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது. மேயர் பதவியும் தி.மு.க.வுக்கே கிடைத்தது. இந்த வெற்றி தொண்டர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

1962ஆம் ஆண்டு அடுத்த பொதுத் தேர்தல் வந்தது. தி.மு.க. இந்த முறை 142 இடங்களில் போட்டியிட்டது. பெரியார் தி.மு.க.வுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார். ஆனால், பிரசார மேடைகளில் அண்ணா பெரியாரை எதிர்த்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

தமிழக அரசியல் தலைவர்கள் புருவம் உயர்த்தினர். இந்தத் தேர்தலில், முன்பு தி.மு.க. வெற்றி பெற்றிருந்த இடங்களில் காங்கிரஸ் தீவிர பிரசாரம் செய்தது. விளைவு அந்த இடங்களில் தி.மு.க.வுக்கு தோல்வி உண்டானது. அண்ணாவும் தோல்வியைத் தழுவினார்.

ஆனால் கடந்த தேர்தலைவிட தி.மு.க. அதிக இடங்களில், அதாவது 50 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. இருந்தும் அண்ணாவின் தோல்வி தம்பிகளிடத்தில் சற்று அயர்ச்சியை உண்டாக்கியது. ஆனால், அண்ணா துவளவில்லை.

"நான் தோற்றதால் தோல்வி என் நம்பிக்கையைத் தகர்த்துவிடும் என்று எண்ணாதீர்கள். ஓர் அண்ணாதுரைக்குப் பதிலாக ஐம்பது அண்ணாதுரைகளை சட்டசபைக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று கட்சியினரையும் தனது ஆதரவாளர்களையும் உற்சாகப்படுத்தினார் அண்ணா. இருப்பினும் தி.மு.க.வினர்களால்

Scanned by CamScanner

## அண்ணாவின் குடும்பம்

தமிழக மக்கள் அனைவரையுமே தங்கள் குடும்பமாக எண்ணிய அண்ணா - இராணி தம்பதியினருக்கு குழந்தைகள் இல்லை. எனவே அண்ணா தனது சொந்த அக்காவின் குழந்தைகளான பரிமளம், இளங்கோவன், கவுதமன், பாபு ஆகிய பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்தார்.

## இறுதி நாட்கள்

அண்ணா பொதுவாழ்க்கையில் நுழைந்த பின்னர் ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான மேடைகளில் உரையாற்றி, பற்பல போராட்டங்களில் ஈடுபட்டு, பலமுறை சிறையில் அடைபட்டு ஓய்வின்றிச் செயல்பட்டவர் அண்ணா.

அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் பொதுக்கூட்டங்களில் பேசும்போது அவரது தொண்டையில் தாங்க முடியாத வலி கண்டது. இருப்பினும் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தாத அண்ணா, தொண்டையைத் தடவிக் கொண்டே உரையாற்றினார்.

நாளுக்கு நாள் அவரது தொண்டையிலும் வயிற்றிலும் தாங்க முடியாத வலி உண்டாயிற்று. அண்ணாவைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவரது உணவுக் குழாயில் புற்றுநோய் இருப்பதைக் கண்டறிந்தார்கள்.

ஆரம்பத்தில் சென்னையிலேயே சிகிச்சை பெற்று வந்தார் அண்ணா. ஆனால் நோய் தீவிரமாகவே, அமெரிக்கா சென்று புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்படி மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

அதன்படி 1968ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அண்ணா அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். அண்ணாவின் உடல்நிலையை

Scanned by CamScanner

அறிந்த தமிழக மக்கள் அனைவரும் பெரும் கவலை கொண்டனர். அண்ணா எப்படியேனும் நல்லவண்ணம் அறுவை சிகிச்சை பெற்று தமிழகம் திரும்ப வேண்டும் என்று அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

செப்டம்பர் 16ஆம் நாள் அமெரிக்காவில் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. புகழ்பெற்ற மருத்துவர் தியோடர் மில்லர் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை செய்து முடித்தார்.

அறுவை சிகிச்சையை முடித்த மருத்துவர் அண்ணாவிடம், “இனி நீங்கள் அதிகம் பேசக் கூடாது, ஓடியாடி வேலை செய்யக் கூடாது; நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.

அண்ணா அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு நவம்பர் 6ஆம் நாள் இந்தியா வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்தில் அண்ணாவைக் காண மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. அண்ணாவைக் கண்ட மக்கள், “அண்ணா! அண்ணா!” என்று குரல் கொடுத்து தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். மக்களின் அன்பைக் கண்ட அண்ணாவின் மனம் நெகிழ்ந்தது.

‘என் மீது அளவற்ற அன்பு வைத்திருக்கும் இந்த மக்களுக்காக உழைக்கக் கூடாது என்றால், இந்த உடல் எனக்கு எதற்கு?’ என்ற எண்ணம் அவருள் எழுந்தது. அண்ணா மருத்துவரின் அறிவுரையை மறந்தே போனார். மீண்டும் தன் நலிவுற்ற உடல்நிலையைப் பொருட்படுத்தாமல் மக்களுக்காக உழைக்கத் தொடங்கிவிட்டார்.

பெயரளவில் பொதுக்கூட்டங்களில் பேசுவதைக் குறைத்துக் கொண்டாலும், அவர் தனது அரசு அலுவல்களைத் தொடர்ந்து ஆற்றியே வந்தார்.

Scanned by CamScanner